## நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

## ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 206/2016

## வழக்கு சாட்சி – அ.சா.1.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜம்மாள் | ஜாதி | |
| தந்தை பெயர் / கணவர் பெயர் | மஞ்சிநாயக்கர் | தொழில் | கூலி |
| கிராமம் | வீருசின்னம்மாள்புரம் | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 80 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.10.2024.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை:–</u>**

1வது எதிரி எனது அக்காவின் மகன். 2வது எதிரி 1வது எதிரியின் மனைவி. எனக்கும் எதிரிகளுக்கும் பிரிக்கப்படாத தோட்டம் உள்ளது. அதில் 1வது எதிரியின் அப்பாவிற்கும், எங்களுக்கும் பொது பாத்தியம் உள்ளது. சுமார் 8 வருடங்களுக்கு முன்பாக எங்கள் வீட்டின் அருகே எதிரிகள் இருவரும் என்னை பார்த்து தோட்டத்திற்குள் எதற்கு வருகிறாய் என்று கேட்டு என்னை செருப்பால் அடித்தார்கள். உன்னை கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்கள். அதில் எனக்கு இரண்டு கைகளும் உடைந்துவிட்டது. நான் க.விலக்கு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது விசாரிக்க வந்த போலிசாரிடம் புகார் கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் அசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்தை நான் காவல் நிலையத்தில்

வைத்துதான் செய்தேன். எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே சொத்துக்கள் பிரிக்கப்பட்டுவிட்டது. ஆனால கிணற்று பாகம் மட்டும் பிரிக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் தான் எதிரிகளிடமிருந்து அதிக தண்ணீர் பாசனம் கேட்டு எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல.